**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.2997/ஆ5/2025, நாள். 11/08/2025**

*****

பொருள் பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் மற்றும் பள்ளிக்கல்வித்துறை மற்றும் யுனிசெப் நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்தி வரும் பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டம் (SIDP 4.0) 2025 – 2026ம் ஆண்டு திட்டம் செயல்படுத்தப்படும் – அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகளின் வழிகாட்டி ஆசிரியர்களுக்கு மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 நடுநிலைப் பள்ளிகளின் வழிகாட்டி ஆசிரியர்களுக்கு மாவட்ட அளவில் பயிற்சி வழங்குதல் – தொடர்பாக

பார்வை சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.048647/எம்1/இ1/2025, நாள். 03.07.2025 மற்றும் 08.08.2025

*****

பார்வையில் கண்ட செயல்முறைகளின் படி தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனமும், யுனிசெப் மற்றும் பள்ளிக்கல்வித் துறையும் இணைந்து அனைத்து மாவட்டத்திலும் உள்ள அரசு / அரசு உதவிபெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு பள்ளிப் புத்தாக்க மேம்பாட்டுத் திட்டம் 2025–2026 (School Innovation Development Project 4.0) என்கிற திட்டத்தினை செயல்படுத்தப்படவுள்ளது. தமிழ்நாட்டில் திறமையான தொழில் முனைவோர்களை உருவாக்க, பள்ளி தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் தமிழக அரசால் செயல்படுதப்பட்டு வருகிறது.

பள்ளி மாணவர்களில் புதிய தொழில் கண்டுபிடிப்புக்களை ஊக்குவிப்பது தொழில் முனைவோர் கலாச்சாரத்தை வளர்ப்பது, தொழில் முனைதல் மற்றும் தலைமைத்துவ பண்புகளை உருவாக்குதல் போன்ற பல்வேறு பயிற்சிகள் மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. மேலும், இத்திட்டத்தினை தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனமும், யுனிசெப் மற்றும் பள்ளிக்கல்வித் துறையும் இணைந்து செயல்படுத்திவருகிறது.

இதன் தொடர்ச்சியாக மாவட்ட முதன்மைக் கருத்தாளர்களுக்கான பயிற்சியினை 38 மாவட்ட சுற்றுச் சூழல் ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களுக்கு தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் சார்பில் சென்னையில் வழங்கப்பட்டது.

இதன் அடுத்த கட்டமாக மாவட்ட முதன்மைக் கருத்தாளர் மற்றும் மாவட்ட சுற்றுச் சூழல் ஒருங்கிணைப்பாளர் வாயிலாக அனைத்து அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 08ஆம் வகுப்பு வரை பணிபுரியும் ஆசிரியர்களில் பட்டதாரி வழிகாட்டி ஆசிரியர் ஒருவர் மற்றும் 9 முதல் 12ஆம் வகுப்பு வரையில் பணிபுரியும் ஆசிரியர்களில் ஒருவர் என அந்தந்த பள்ளிக்கு வழிகாட்டி ஆசிரியர்களாக செயல்படுவர். (மேல்நிலைப் பள்ளி என்றால் ஒரு பட்டாரி ஆசிரியர் மற்றும் ஒரு முதுகலை ஆசிரியர் வழிகாட்டி ஆசிரியராக செயல்படுவர், உயர்நிலைப் பள்ளி என்றால் ஒரு பட்டதாரி ஆசிரியர் வழிகாட்டி ஆசிரியராக செயல்படுவர்.) மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 நடுநிலைப் பள்ளிகளிலிருந்து ஒரு வழிகாட்டி ஆசிரியர் இப்பயிற்சியில் கலந்துக்கொள்ள தெரிவிக்கப்படுகிறது. (10 நடுநிலைப் பள்ளிகளின் பெயர் பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது)

இப்பயிற்சியில் பள்ளிப் புத்தாக்க மேம்பாட்டுத் திட்டம் குறித்தும் வழிகாட்டி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் பங்கேற்பு பற்றியும், அப்பயிற்சியின் மூலம் இணைய தளத்தினை கையாளுவது குறித்தும் மற்றும் மாணவர்கள் இணையதளத்தினை பயன்படுத்த வைப்பது குறித்தும் மண்டல / மாநில அளவிலான போட்டிகளுக்கு வழிகாட்டி ஆசிரியர்களுடன் மாணவர்களை அனுப்பி வைத்தல் சார்ந்த பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது.

எனவே தங்கள் பள்ளியில் உள்ள பள்ளிப் புத்தாக்க மேம்பாட்டுத் திட்டம் சார்ந்து பட்டதாரி / முதுகலை வழிகாட்டி ஆசிரியர்களை கீழ்காணும்படி குறிப்பிட்ட தேதியில் பயிற்சியில் கலந்துக்கொள்ள அனுப்பிவைக்குமாறு தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண். | பயிற்சி நடைபெறும் நாள் | பயிற்சி நடைபெறும் நேரம் | பயிற்சி நடைபெறும் இடம் | பங்குபெறும் ஒன்றியங்கள் விவரம் |
|---|---|---|---|---|
| 01 | 13.08.2025 (புதன்கிழமை) | காலை 9.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை | மாவட்ட திட்ட அலுவலகம், (SAMAGRA SIKSHA ) காந்திநகர், வேலூர் மாவட்டம். | குடியாத்தம், பேர்ணாம்பட்டு, கே.வி. குப்பம். கணியம்பாடி ஒன்றியங்கள் |
| 02 | 14.08.2025 (வியாழக் கிழமை) | காலை 9.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை | | அணைக்கட்டு, காட்பாடி, வேலூர் புறநகர், வேலூர் நகர் ஒன்றியங்கள் |

**SIDP வழிகாட்டி ஆசிரியர்கள் பயிற்சிக்கு வரும்போது கீழ்காணும் விவரங்கள் கண்டிப்பாக கொண்டு வர வேண்டியவை –**

1. பள்ளியின் UDISE NUMBER
2. தலைமையாசிரியர் பெயர், தலைமையாசிரியர் தொலைபேசி எண் மற்றும் பள்ளியின் மின்னஞ்சல் விவரம்
3. வழிகாட்டி ஆசிரியர் தங்களது SMART PHONE கண்டிப்பாக கொண்டு வர வேண்டும்.
4. வழிகாட்டி ஆசிரியரின் மின்னஞ்சல் முகவரி
5. பயிற்சிக்கு வரும்போது தங்கள் பள்ளியின் ஒரு குழு மாணவர்களின் விவரங்கள் கொண்டு வர வேண்டும்.
6. பயிற்சிக்கு வரும்போது இணைக்கப்பட்டுள்ள படிவத்தினை பூர்த்தி செய்து கொண்டு வர வேண்டும்.

(குறிப்பு – உணவு இடைவேளையில் அனைத்து வழிகாட்டி ஆசிரியர்களுக்கும் உணவு வழங்கப்படும்)

இணைப்பு – SIDP 4.0 படிவங்கள்.

ஒ.பி. 11.08.25

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
வேலூர்.

பெறுநர்

1. தலைமையாசிரியர்கள்,
   அனைத்து அரசு /அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகள்,
   வேலூர் மாவட்டம். (இவ்வலுவலக இணையதளம் மூலமாக)
2. சம்பந்தப்பட்ட பள்ளி ஆசிரியர்கள், (தலைமையாசிரியர்கள் மூலமாக)
3. மாவட்ட சுற்றுச் சூழல் ஒருங்கிணைப்பாளர்,
   முதன்மைக் கல்வி அலுவலகம், வேலூர்.
4. சம்மந்தப்பட்ட நடுநிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள்,
   வேலூர் மாவட்டம் (மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) மூலமாக

நகல் –

1. சென்னை – 6, பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர்,
   (இடைநிலை / தொடக்கக் கல்வி), வேலூர் மாவட்டம்.
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
3. மாவட்ட உதவி திட்ட அலுவலர், காந்தி நகர், வேலூர் மாவட்டம்.
4. வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.

**SIDP (4.0) தேர்ந்தெடுக்கப்பட்ட 10 நடுநிலைப் பள்ளிகளின் விவரங்கள்.**

1. ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, வசந்தநடை
2. ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, வரதலம்பட்டு
3. ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, மோட்டுப்பாளையம்
4. நகராட்சி நடுநிலைப் பள்ளி, அம்பேத்கர் நகர்
5. நகராட்சி நடுநிலைப் பள்ளி, கங்காதரசாமி
6. ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, பேர்ணாம்பட்டு
7. ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, பி.கே. புரம்
8. ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, பள்ளிக்குப்பம்
9. ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, மேல்ஆலத்தூர்
10. ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, களாஸ்பாளையம்.

(மேற்காணும் நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களில் ஒருவரை வழிகாட்டி ஆசிரியராக இப்பயிற்சியில் கலந்துக்கொள்ள தெரிவிக்கப்படுகிறது)